Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-18 | 03-12-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை -289

படச்சுருள்கள் அனைத்தையும் கணினிதொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்.
கணினி முறை வீடியோ மிக்சிங்.
பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்.
அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ்சாலை, கிளிநொச்சி.
(சி-10599)

## பிரபாகரன் வீரத்தின் சின்னம் பர்மியத் தமிழர்கள் புகழாரம்



விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தமிழினத்தின் அடையாளமாகவும், தமிழ் வீரத்தின் சின்னமாகவும் விளங்குவதாக தற்போது மியன்மார் என அழைக்கப்படும் பர்மியப் பிரஜைகளான தமிழர்கள் தெரிவிப்பதாக இயான்ஸ் செய்தி நிறுவன நிருபர் தெரிவித்துள்ளார்.

1960களில் பர்மாவில் வசித்து வந்த ஏனைய நாட்டவர்கள் பர்மாவை விட்டு இராணுவ ஆட்சியாளர்களால் வெளியேற்றப்பட்டபோது வெளியேறிய இத் தமிழர்கள் தமிழ்நாட்டிற்குத் திரும்பாது இந்திய-பர்மிய பிரதான வீதியோடு எல்லைக் கடவைக்கு அண்மித்த மொரே என்ற பட்டினத்தில் வசித்து வருகின்றனர்.

மணிப்பூர் மாநிலத்தில் அமைந்துள்ள இப்பட்டினத்தின் அரைவாசி சனத்தொகை தமிழர்களாவர் (சுமார் 5,000 பேர்). இவர்களில் அநேகர் எல்லையைக் கடந்து செல்பவர்களிற்கான வியாபாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தனது மகனிற்குப் பிரபாகரன் என்று பெயர் வைத்துள்ள ஜி.கலைவண்ணன் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், பிரபாகரன் என்ற பெயர் தனக்கு தனது (IV ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் - நோர்வேத் தூதுவர் அவசர சந்திப்பு

## மாறியுள்ள அரசியல் சூழ்நிலை குறித்து பேச்சுவார்த்தை!



### அமைதி முயற்சிகளைக் குழப்பமுனையும் சக்திகளை ஒடுக்குமாறு விடுதலைப்புலிகள் வலியுறுத்து

(கிளிநொச்சி)

**குறுகிய காலத்திற்குள் ஏற்பாடு செய்யப்பட்ட சிறிலங்காவிற்கான நோர்வேத் தூதுவர்–தமிழ்ச்செல்வன் சந்திப்பு நேற்று நண்பகலில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் அண்மையில் அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் தேசியத்தலைவரின் மாவீரர்நாள் உரை தொடர்பான விடயங்கள் என்பன பற்றி இருதரப்பும் தீவிரமாக ஆராய்ந்துள்ளன.**

தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்றுப்பகல் 11.15மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்புப் பிற்பகல் 1.00மணிவரை நீடித்தது. இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழக்காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் (IV ஆம் பக்கம் பார்க்க)

## உலக.உணவுத் திட்டப் பிரதிநிதிகள் தங்கனைச் சந்தித்துப் பேச்சு

(அலுவலக செய்தியாளர்)

உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகள் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களைக் கிளிநொச்சியில் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நேற்றுக்காலை 10.45 மணிக்கு ஆரம்பமாகிய இச் சந்திப்பு நண்பகல் வரை நீடித்தது. இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பாக துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (லோ)

## வீரவணக்கம்

29.11.2004 அன்று சுகயீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர்- பாலசிங்கம்
சோமசுந்தரம்- பாலசிங்கம்
சொந்த முகவரி இலுப்பைக்கடவை, மன்னார். என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்தவராகும். இவருக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைச் செலுத்துகின்றனர்ள


## படையினரின் அடாவடியைக் கண்டித்து

## வவு.,மன்னாரில் நேற்று பூரண ஹர்த்தால்

### சர். செ. சங்கத்தினர் வராததால் சோதனைச் சாவடிகள் திறக்கப்படவில்லை

(மன்னார்)

சிறிலங்காப்படையினரின் அடாவடித்தனத்தைக் கண்டித்து நேற்று மன்னாரிலும், வவுனியாவிலும் பொதுஅமைப்புகளும், பொதுமக்களும் பூரண ஹர்த்தாலை அனுஷ்டித்தனர். இதற்குச் சகல தரப்பினரும் முழு ஒத்துழைப்பினையும் வழங்கினர். மன்னார், வவுனியா நகரங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டது.மன்னாரில் வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், அரச அரசசார்பற்ற (IV ஆம் பக்கம் பார்க்க)



மன்னார் நகரம்

## இராணுவ ரீல்ட் பைக் அணி, கவச வாகனப் பிரிவை திருமலை நகரப் பாதுகாப்பில் ஈடுபடுத்துவதில்லை

### இராணுவம் - புலிகள் சந்திப்பில் இணக்கம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற அசம்பாவிதங்கள் மற்றும் பதற்றநிலையைத் தணித்து மீண்டும் இயல்புநிலையை ஏற்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை பகல் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை அலுவலகத்தில் பொலிஸ், இராணுவம் மற்றும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்றது.

விடுதலைப்புலிகள் தரப்பில் விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், அவருடன் திருமலைமாவட்ட துணைத் தளபதி வசந்தன், திருமலை நகர அரசியல்துறைப்பொறுப்பாளர் சிவகுமார், தளபதி குணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொலிஸ் தரப்பில் சிரேஸ்ட பொலிஸ் (IV ஆம் பக்கம் பார்க்க)

## திருமாவளவன் பங்கேற்புடன் கிளி.யில் சிறப்புற நடைபெற்ற நூல் வெளியீட்டுவிழா

(அலுவலகசெய்தியாளர்)



அறிவமுது பதிப்பகத்தின் புதியவெளியீடுகளான "போர் உலா", "உண்மை மனிதனின் கதை", "பண்டிதர் நாட்குறிப்பேடு", "மனக்கோலம்" போன்ற நூல்களின் அறிமுகவிழா கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மிகச் சிறப்பான முறையில் நேற்று நடைபெற்றது.

பேரிகை அமைப்பின் தலைவர் அ.வேளமாலிஜிதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி அறிமுகவிழாவின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், திருமதி.பொன்தியாகம் ஆகியோர்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

கிளி/வயர்லெஸ் A-9 வீதியில் சுமார் 150 மீற்றர் தூரத்தில் நல்ல சுற்றாடலும், அமைதியான சூழலும் குடியிருப்பதற்கும். சிறுகைத் தொழிற்சாலை நடாத்துவதற்கும் சிறந்த 3/4 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. விலை 5 1/2 இலட்சம்.தொடர்புகட்கு அ.இராஜநாயகம், இல.100 விவேகானந்த நகர், கிளிநொச்சி. (சி5319)

### வேழன் பதிப்பகம்

உங்கள் சகலவிதமான அச்சக வேலைகளையும் கணினிமூலம் வடிவமைத்து ஓவ்செற்றில் அச்சிட்டுப்பெற்றுக்கொள்ள வேழன் பதிப்பகம். கனகபுரம் வீதி, கிளிநொச்சி. (5284)

### 2005 இற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

விசேட புலமைப்பரிசில் வகுப்பு, தரம் 6-11 வரையான வகுப்புக்கள்,விசேடசிங்கள வகுப்பு என்பன. 06.12.2004, மாலை 3.00 மணிக்கு கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர், இல:-01 இல் ஆரம்பமாகிறது.தகவல் நிர்வாகி. (4944)

### பெயர் மாற்றம்

உடையார் கட்டு வடக்கு இருட்டு மடுவில் வசிக்கும் வல்லிபுரம் தர்மராசா ஆகிய எனது பெயரை 03.12.2004 ஆம் திகதியிலிருந்து வல்லிபுரம் தர்மிழன் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன்

தகவல்
வ.தர்மிழன்.
(5331)

### தவறிவிட்டது

சந்திரசேகரன் டேவிட்சாந்தகுமார் ஆகிய எனது பேர்ஸ், தேசிய அடையாளஅட்டை,நிரந்தர பாஸ், காரியாலய திறப்புகள், இன்னும் சில முக்கிய ஆவணங்களுடன 29.11.2004 ஆம் திகதி புதுக்குடியிருப்பிற்கும் பரந்தனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியில் ஒப்படைக்க வேண்டுகின்றேன். தகவல் ச.டேவிட்சாந்தகுமார். (5330)

### B(–)ve குருதிவகை, சிறுநீரகம் அவசரம் தேவை

அராலிவடக்கு, யாழ்ப்பாணத்தை நிரந்தர முகவரியாகக் கொண்ட தற்போது சுவிட்சர்லாந்தில் வசித்து வரும் திரு.செல்லத்துரை சிவபாதம், வயது 52 என்பவருக்கு அவசர "சிறுநீரகமாற்று" சத்திரசிகிச்சை செய்வதற்கு B(-)ve சிறுநீரகம் தேவைப்படுகின்றது. சன்மானம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி-
திருமதி.க.இராசரத்தினம்,
மாவட்ட வைத்தியசாலை,
கிளிநொச்சி.
T.P.021-228 5810

(சி 10650)

# விசேட தேவைக்கு உட்பட்டோர் வவு. மாவட்டத்தில் 1500பேர் உள்ளனர்

## அ.சா.நிறுவனங்களின் ஒன்றியம் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் விசேட தேவைக்கு உட்பட்டவர்கள் சுமார் 1,500 பேர் இருப்பதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் தெரிவிக்கிறது. சர்வதேச விசேட தேவைக்கு உட்பட்டோர் தினம் கொண்டாடுவது தொடர்பாக நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் இது தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் காலத்தில் வலுவிழந்தோர் என்ற சொற்பதம் நீக்கப்பட்டு விசேட தேவைக்கு உட்பட்டோர் என்ற சொல் பாவிக்கப்படவேண்டும் என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் பிறப்பிலேயும், நோய் காரணமாகவும் கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்ற போர் காரணமாகவும் இந்த விசேட தேவைக்கு உட்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளோரில் பெரும்பாலானவர்கள் சிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐ.நா சபையால் ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் மூன்றாம் நாள் விசேட தேவைக்கு உட்பட்டோருக்கான நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளமையும் 1992 ஆம் ஆண்டுமுதல் உலகளாவிய ரீதியில் இந்தத் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றமையும் 1983 ஆம் ஆண்டில் இருந்து 1992ஆம் ஆண்டுவரை ஐ.நா. சபையால் விசேட தேவைக்கு உட்பட்டோர் தசாப்தமாகக் கொண்டாடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (32)

### 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 11 1952 — மறைவு 29 11 1999

**அமரர். இராசநாயகம் தவமணி (மணி)**

ஒளிவிளக் கணைந்ததினால் - எம்
கண்கள் ஒளியிழந்து துடிக்குதம்மா
அன்பின் ஊற்றுக்களாய் - எம்
இதயத்தில் ஊறிவிட்டு
காலன் செய்த விந்தையால்
கதிகலங்க எம்மைவைத்து
விண்ணுலகம் சென்றதினால்
ஈரமான எம்மிதயம் - இன்று
கானல் நீரானதனால் - எம்
உள்ளம் வெந்து வறண்ட
பாலைவனம் ஆனதம்மா
ஐந்து ஆண்டுகள் அவனியிலே
அவசரமாய் சென்றபோதும் - எம்
கண்களின் ஈரம் மட்டும்
பெருக்கெடுத்து ஓடுதம்மா.

நல்லூர்,
பூநகரி.

தகவல்
துணைவர்,பிள்ளைகள்,
மற்றும்தங்கைமார்குடும்பம்,
தம்பிமார் குடும்பத்தினர்கள்.

(சி10843)

# சர்வதேச ஊனமுற்றோர் தினம் - 2004

**புரையோடிப் போயுள்ள யுத்த அனர்த்தங்களினாலும், வேறு சில காரணிகளினாலும், தமது அவயவங்களை இழந்தும் உடல்மனநிலைகளிலிருந்து மாறுபட்டும் இயல்பு வாழ்கையினைப் பறிகொடுத்த நிலையிலும் இன்னும் வாழவேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டு எம்முடன் இருந்து கொண்டிருக்கும் இவர்கள் யார்?**

* இவர்கள் எமது உடன்பிறப்புக்கள்
* மனித உரிமைகள் அனைத்திற்கும் உரித்துடையவர்கள்
* மீண்டும் வாழத் துடிப்பவர்கள்
* இவர்கள் மாற்று வலிமை படைத்தவர்கள்
* வாழ்க்கையின் படிகளை இடையில் நிறுத்தியவர்கள்
* சமூக நீரோட்டத்தில் மீண்டும் சங்கமிக்க விரும்புபவர்கள்

**இதற்கு நாம் செய்யக் கூடிய மனித நேயப் பணிகள் யாவை?**

* இவர்களை எமது உடன்பிறப்புக்களாகக் கருதுவோம்
* உரிமைகள் அனைத்திலும் சம வாய்ப்பளிப்போம்
* வாழ்க்கை வசதிகளை வகுத்துக் கொடுப்போம்
* இவர்களது மாற்று வலிமையினை வளம்படுத்துவோம்
* இடை நின்ற வாழ்க்கையைப் புனரமைப்போம்
* எமது அன்றாட வாழ்வில் அவர்களையும் இணைப்போம்.

**இவர்கள் ஊனமுற்றவர்கள் என்பதற்குப் பதிலாக மாற்று வலிமை படைத்த வல்லுனர்கள் என்பதை மனதில் இருத்தி இவர்களுக்குள்ளே மறைந்து கிடக்கும் அளப்பரிய ஆற்றல்களை வெளிக்கொணரவும், அதற்குரிய வழிகளை அமைத்துக்கொடுப்பதற்கும் உண்மையுடன் செயற்படுவோமென இவர்களுக்கான இன்றைய நாளில் எம்மை இணைத்துக் கொள்வோம்.**

**வெண்புறா நிறுவனம்.**

(சி-10841)

# போதைப் பொருள்பாவனை அரசியல்வன்முறை

# இல.இக்கு முதன்மை இடமென்கிறார் சனாதிபதி

(கொழும்பு)

மிகவும் கூடுதலான அரசியல் வன்முறைகள், தற்கொலைகள் இடம்பெறும் நாடாகவும், அதிக மானோர் போதைப்பழக் கத்திற்கு அடிமையாகியுள்ள நாடாகவும் சர்வதேச சமூகத்தில் இலங்கைக்கு ஏற்பட்ட அவப்பெயர் குறித்து தான் பெரிதும் கவலை அடைவ தாக சனாதிபதி சந்திரிகா தெரிவித் துள்ளார்.

ஐ.நா.சபையின் கணிப்பீடு களுக்கு அமைய கூடுதலான அரசியல் வன்முறைகள் நடை பெறும் 10 நாடுகளில் இலங்கை யும் ஒன்றாகும் என அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரை யாற்றிய வேளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# ராஜகிரியவில் ஐ.தே.கட்சி அரச எதிர்ப்புப் போராட்டம்

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சி நேற்று முன்தினம் பிற்பகல் ராஜகிரியவில் அரசாங்க எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளது. இது தொடர்பில் ஐக்கியதேசியக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தகவல் அளிக்கையில், அரசாங்கம், அரச ஊழியர்களுக்கு 70 வீத சம்பள அதிகரிப்பைத் தருவதாகக் கூறித் தற்சமயம் 20 வீத சம்பள அதிகரிப்பையே வழங்கியுள்ளது. அதிலும் மேலதிக வேலைநேரக்கொடுப்பனவை நிறுத்தி மற்றும் வரிகளை விதித்து சம்பள உயர்வை 10 வீதமாக குறைத்துள்ளது. அத்துடன் காப்பு றுதிக் கட்டணத்தை உயர்த்தியுள்ள தன் மூலம் 90 மில்லியன்களாக இருந்து சுமார் 500 மில்லியன் ரூபாவை அரசாங்கம் அரசாங்க ஊழியர்களிடம் இருந்து அறவிட் டுள்ளது.எனவே அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் முழுமையாக மக்களை ஏமாற்றும் திட்டமாகும் எனத்தெரிவித்துள்ளார். (32)

# சர். விசேட தேவைக்குட்பட்டோர் தினம் இன்று வவு. மாவட்டத்தில் அனுஷ்டிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட சர்வதேச விசேட தேவைக்குட்பட்டோர் தினம் இன்று காலை 10.00 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

வவுனியா மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமும், சமூகம்சார் புனர்வாழ்வுத்திட்ட மாவட்ட மட்ட பின்புலக்குழுவும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வு வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் வே.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வவுனியா அரச அதிபர் க.கணேஷ் பிரதம விருந் தினராகவும், வவுனியா மாவட்டத் திட்டமிடல் செயலகப் பிரதித்திட்டப் பணிப்பாளர் ச.பரமகுலசிங்கம், வவுனியா பொது வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் ப.சத்தியலிங்கம், வவுனியா தெற்கு வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.நா.மாணிக்கவாசகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ள உள்ளனர். (10)

# 20இலட்.ரூபா பெறுமதியான போதைப் பொருளுடன் பாக்.பிரஜை கைது

(கொழும்பு)

டுபாயில் இருந்து கட்டுநாயக்க வுக்கு வருகை தந்தபாகிஸ்தா னியர் ஒருவரிடம் இருந்து ஹெரோ யின் போதைப்பொருள் கைப் பற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள் ளது. இவர் விழுங்கிய நிலையில் எடுத்து வந்ததாகக் கூறப்படும் சுமார் 792 கிராம் எடையைக் கொண்ட ஹெரோயின் போதைப் பொருட்கள் அடங்கிய குளிகை கள் நேற்று முன்தினம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைத்து வயிற்றோட்ட மருந்து வழங்கப்பட்டு வெளியில் எடுக் கப்பட்டன. இவற்றின் சந்தைப் பெறுமதி 20இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

## மாவீரர் நினைவு உதைபந்தாட்டப்போட்டி

# வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி மாவட்ட ரீதியான போட்டிக்குத் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிப் பிரதேச அணிகளுக்கிடையே மாவீரர் நினைவாக நடாத்தப்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் கழகம் வெற்றிபெற்று மாவட்ட ரீதியான போட்டிக் குத் தெரிவாகியுள்ளது. கிளி.மாவட்ட ரீதியில் லீக் முறையில் நடைபெற வுள்ள போட்டியில் இறுதிப் போட்டியில் பங்குபற்றிய உருத்திரபுரம் சந்திரோதயா அணியும் தகுதி பெற்றுள்ளது.

முன்னதாக நேற்று காலை 9.00 மணியளவில் கிளி.உதயதாரகை மைதானத்தில் ஆரம்பமான அரையிறுதிப் போட்டிகளின் முதலாவது போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி உருத்திரபுரம் உழவர் ஒன்றிய அணியை சமநிலை உடைப்பின் மூலம் வெற்றியீட்டி இறுதிப்போட்டிக்குத் தெரிவானது. போட்டியின் இறுதிவரை உழவர் ஒன்றியம் அணியின் கையே மேலோங்கியிருந்தாலும் இரு அணிகளாலும் கோல் எதுவும் போடமுடிய வில்லை. தொடர்ந்து சமநிலை உதைப்பின் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 5-4 என்ற கோல்கணக்கில் லக் கிஸ்ரார் அணி வெற்றிபெற்றது.

அடுத்து நடைபெற்ற மற்றொரு அரையிறுதிப் போட்டியின் ஆரம்பத்தில் சந்திரோதயா அணியின் வீரர் வர்மன் தனது வழமையான Long Shot மூலம் கோல் ஒன்றைப்போட்டு தமது அணியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றார். ஆரம்பம் முதலே சந்திரோதயா அணியின் கையே மேலோங்கியிருந்தாலும் இறுதிப்பகுதியில் திருநகர் அணியினர் மிகப் பிரமாதமாக ஆடினர். எனினும், கோல் எதனையும் பெறமுடியவில்லை.

பிற்பகல் நடைபெற்ற இறுதிப்போட்டியில் லக்கிஸ்ரார் அணிவீரர்கள் சுதாகரன், ரமேஸ்காந்த் தலா ஒரு கோல்போட்டு கரைச்சிப் பிரதேச சம்பியன் நிலையை தமது அணிக்கு பெற்றுக்கொடுத்தனர். இப்போட்டி யில் சந்திரோதயா அணியினால் கோல் எதுவும் போடமுடியவில்லை.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக குபேந்திரன், ரவி, சிவலிங்கம், சிவனேசன் ஆகியோர் கடமையாற்றினர்.

பளைப்பிரதேசத்தில் தெரிவாகிய சோலை மற்றும் ஆதவன் அணிகளும், பூநகரிப் பிரதேசத்தில் தெரிவான விநாயகர் மற்றும் நாச்சிக்குடா சென்மேரிஸ், கண்டாவளைப் பிரதேசத்தில் தெரிவான இளைஞர் வட்டம் அணிகளுடன் லீக் முறையில் லக்கிஸ்ரார் மற்றும் சந்திரோதயா அணிகள் மாவட்ட ரீதியிலான போட்டியில் பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளன.

நேற்றைய நிகழ்வுகளைப் பரந்தன் பிரதேசப் பொறுப்பாளர் வாணன் தேசிக்கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# சட்டத்தரணி போல்நடித்து வர்த்தகரிடம் பணம் மோசடி

(கொழும்பு)

சட்டத்தரணியைப் போல நடித்த ஒருவர் வர்த்தகர் ஒருவரிடம் இருந்த 5 இலட்சம் ரூபாவை மோசடி செய்த சம்பவம் நேற்று முன்தினம் களுத்துறை நீதிமன்றத்தில் இடம் பெற்றுள்ளது.

ஆவணம் ஒன்றில் கையெழுத் திடுவதாகக் கூறி இந்தப் பணத்தை அவர் களவாடிச்சென்றுள்ளதாகவே களுத்துறை தெற்குப் பொலிசா ரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

இதனையடுத்து குறிப்பிட்ட போலிச் சட்டத்தரணியை கைது செய்ய பொலிசார் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (32)

## தற்காலிக இடைநிறுத்தம்

(அலுவலகசெய்தியாளர்)

இன்று உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட இருந்த கிளி நொச்சி யாழ்ப்பாணத்திற்கான தொலைத்தொடர்பு இணைப்பு கோபுரம் தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்டுள்ளது.

மேற்படி தொலைத் தொடர்புக் கோபுரத்தின் சேவை இன்றிலிருந்து ஆரம்பிக்கப்பட இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளது என்றும் அதன்பொறியிய லாளர் தெரிவித்துள்ளார். (கு)

## கொல்கத்தா டெஸ்ட்

# 8 விக்கெட்டுகளால் இந்தியா வெற்றி

# தொடரையும் கைப்பற்றியது

சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் இந்திய அணி தென்னாபிரிக்க அணியை வெற்றி பெற்றுள்ளது.



இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கொல்கத்தாவில் நேற்று முடிவடைந்த இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி எட்டு விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்க அணியை வெற்றி பெற்று டெஸ்ட் தொடரையும் கைப்பற்றியுள்ளது. முன்னதாக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றுள்ள நிலையில் நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. இதில் அணித் தலைவர் ஸ்மித் 71 ஓட்டங்களையும், கலிஸ் 55 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஹர்பஜன்சிங் மிகச் சிறப்பாகப் பந்து வீசி 87 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களை யும், அனில் கும்ளே மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்நிலையில், முதல் இன்னிங்சில் தென்னாபிரிக்க அணியைவிட 106 ஓட்டங்களை மேலதிகமாகப் பெற்றிருந்த இந்திய அணி, மேலும் 117 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களம் இறங்கிய இந்திய அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. இதில், காம்பீர் 26 ஓட்டங்களை யும், ஆட்டமிழக் காது ராவிட் 47 ஓட்டங்களையும், சச்சின் 32 ஓட்டங்களையும், பெற்றனர்.

இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட இவ் டெஸ்ட் போட்டித் தொடரை 1-0 என்ற ரீதியில் இந்திய அணி கைப்பற்றியுள்ளது.

இதேவேளை, இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே இப்போட்டியில் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதன் மூலம் கபில்தேவின் 434 என்ற சாதனையை சமன் செய்துள்ளார். இதன் மூலம் இந்திய அணியில் அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரராகவும், உலகில் அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய ஐந்தாவது வீரராகவும் அவர் இடம்பிடித்துள்ளார்.



## இராணுவ...

அத்தியட்சகர் உபாலிஹேவகே, இராணுவத்தரப்பில் திருமலை மாவட்ட 22ஆவது பிரிகேட் கட்டளைத் தளபதி சார்மன் குலதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சார்பில் அதன் திருகோணமலை மாவட்டத் தலைவர் டாக்பின் ஆட்னஸ், ஜான்ஸ் லெடாஸ், ஹெல்கே லிபேட்ஸ், யான் றொலின் பங்கு பற்றினர்.

நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமான கலந்துரையாடல் பிற்பகல் 2 மணியளவில் முடிவடைந்தது. சந்திப்பின் பின்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் திருமலை மாவட்டத் தலைவர் டாக்பின் ஆட்நெஸ் முதலில் செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

"பேச்சுக்கள் ஆக்க பூர்வமானவையாக அமைந்தன. திருகோணமலை நகரின் இயல்பு நிலையை தோற்றுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இடையே இணக்கம் காணப்பட்டது" என்று டாக்பின் ஆட்நெஸ் தெரிவித்தார். பின்னர் விடுதலைப்புலிகள் திருமலைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் செய்தியாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்டார்.

"இனங்களுக்கிடையில் பதற்றம், குழப்பத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை திருகோணமலையில் மேற்கொள்ள வேண்டாமென்று ஜே.வி.பி யினரை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வலியுறுத்த வேண்டுமென்று நாம் சந்திப்பின் போது கேட்டுக்கொண்டோம்" என எழிலன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். திருகோணமலையில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களுக்கு சிங்களக் குழுக்களும் படையினருமே காரணம் என்பதை கலந்துரையாடலின்போது தாம் சுட்டிக்காட்டியதாக தெரிவித்த எழிலன் மீண்டும் இயல்புநிலையை ஏற்படுத்துவதை தமிழ்ப் பகுதிகளில் விடுதலைப் புலிகளும் சிங்களப் பகுதிகளில் பொலிசாரும் படையினரும் மேற்கொள்வதென இணக்கம் காணப்பட்டதாகவும் கூறினார்.

இராணுவத்தின் பீல்ட்பைக் அணி மற்றும் இராணுவ கவச வாகனப்பிரிவினர் திருகோணமலை நகரில் பாதுகாப்புக்கடமையில் ஈடுபடுத்தப்படக்கூடாது என்ற கோரிக்கை கலந்துரையாடலின் போது ஏற்றுக் கொள்ளப்பட்டது. "இராணுவ பீல்ட் பைக் குழு மற்றும் கவசப்படையினர் பாதுகாப்புக்கடமையிலிருந்து விலக்கிக்கொள்ளப்படுவர், பொலிசார்சட்டம்-ஒழுங்கை நிலை நாட்டுவதில் பயன்படுத்தப்படுவர் என்றும் இணக்கம் காணப்பட்டது".இவ்வாறுஎழிலன் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடல் தொடர்பாக இணக்கம் காணப்பட்ட விடயங்களை உள்ளடக்கி கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்றும் அவ்வறிக்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாகவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலைத் தலைவர் டாக்பின் ஆட்நெஸ் தெரிவித்தார்.

திருகோணமலை பிரதேசத்தில் நிலமை வழமைக்குத் திரும்பும்வரை எந்த விதமான ஹர்த்தால்களுக்கோ அல்லது பேரணிகளுக்கோ அனுமதி கொடுக்க வேண்டாம் என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பாதுகாப்புத் தரப்பிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.(25)

# வீரவணக்கக் கூட்டமும் வித்துடல் விதைப்பும்

கடந்த 01.08.1997 அன்று வவுனியா றம்பைக்குளம் பகுதியில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலின் போது விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று 28.11.2004 வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் கடல்வேந்தன் அவர்களின் வித்துடல் நேற்று முன்தினம் மாலை சாட்டி துயிலுமில்லத்தில் விதைக்கப்பட்டது.

முன்னதாக ஊர்காவற்றுறை பிரதேசசபை திறந்த வெளியரங்கில் நினைவஞ்சலிக்கூட்டம் தீவகதேசிய எழுச்சிப் பேரவை இணைப்பாளர் செல்வி தலைமையில் இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை பிரதேசசபை செயலாளர் எஸ். லோகநாதன், வெகுசன அமைப்புக்களின் ஒன்றிய ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், இம்ரான் பாண்டியன் படையணிப் போராளியான கார்வேந்தன் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர். பெருமளவு மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் ஊர்காவற்றுறை செருக்கன்சந்தி, புளியங்கூடல்ச் சந்தி, கெட்டில் வேலனையூடாக சாட்டி துயிலுமில்லம் சென்றடைந்தது. வழி நெடுகிலும் மக்கள் திரண்டு நின்று மலர் அஞ்சலி செலுத்தினர்.

சாட்டி மாவீரர்துயிலும் இல்லத்தில் மாவீரர் பெற்றோர் அஞ்சலி செலுத்தினர். *(15,36)*

# காது, மூக்கு, தொண்டை நோய்களுக்கு விசேட சிகிச்சை

வெளிநாட்டிலிருந்து வருகை தந்திருக்கும்காது,மூக்கு, தொண்டை சிகிச்சை நிபுணர் றொபேட்-பெஞ்சமின் அவர்களால் காது, மூக்கு, தொண்டை சம்பந்தப்பட்ட நோய்களிற்கான ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளன. இதில் பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பிலுள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் வெளிநோயாளர் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வரும் சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை வழங்கப்படவுள்ளன.

சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டுமென சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கான சத்திர சிகிச்சைகள் வரும் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது என டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## படையினர்...

நிறுவனங்களின் அலுவலகங்கள், வங்கிகள் அனைத்தும் மூடப்பட்டு காணப்பட்டன. வாகன ஓட்டமும் வீதிகளில் காணப்படவில்லை. அண்மையில் மன்னார் மாவட்டத்தில் அரச படைகள் பொது மக்கள் மீது கண்முடித்தனமாக தாக்குதல் நடத்தியது. தமிழீழ தேசியக் கொடியினை அவமதித்தது. இடைக்கால நிர்வாகம் வழங்க தாமதித்தது, வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி விளையாட்டு மைதானத்தில் அப்பாவி இளைஞர்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டமை, வவுனியா வேப்பங்குளத்தில் மாவீரர் நாள் நிகழ்வை படையினர் குழப்ப முயற்சித்தமை, வவுனியாவில் போராளிகள், பொது மக்கள் மீதான தாக்குதல், செய்தியாளர்கள் தாக்கப்பட்டமை போன்ற விடயங்களுக்கு கண்டனம் தெரிவித்தே இந்தக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஹர்த்தாலைத் தொடர்ந்து மன்னார் அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றையும் வெகுசன அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதிகள் கையளித்தனர்.

வவுனியாவில் நேற்று (வியாழன்) பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் வவுனியாவில் உள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் முடப்பட்டிருந்தன. அரச, தனியார் போக்குவரத்துகள் எதுவும் இடம் பெறவில்லை வீதிகளில் படையினரைத்தவிர மக்கள் எவரும் நடமாடவில்லை. இதனால் வவுனியா நகரமே வெறிச்சோடிக் காணப்பட்டது.

வவுனியா நகரில் நூற்றுக் கணக்கான பொலிசாரும் இராணுவத்தினரும் ஆங்காங்கே குவிக்கப்பட்டிருந்தனர். இராணுவ பவள் கவச வாகனங்களும், துருப்புக்காவி வாகனங்களும் நகரை வலம் வந்த வண்ணம் இருந்தன.

வேப்பங்குளம் பகுதி வீதியில் ரயர்கள் போடப்பட்டு எரிக்கப்பட்டன. அதனை அகற்ற படையினர் முயற்சித்த போதும் அம்முயற்சி கைகூடவில்லை.

இதேவேளை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் கடமைக்கு வராதமையினால் வவுனியா - ஓமந்தைச் சோதனைச் சாவடியும், மன்னார் உயிலங்குளம் சோதனைச் சாடியும் மூடப்பட்டிருந்தது.

வவுனியாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் பணியாற்றும் உள்ளூர் ஊழியர்கள் கடமைக்கு வராமையினாலேயே தாங்கள் சோதனைச் சாவடிகளுக்குச் செல்ல முடியவில்லை என சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் தெரிவித்துள்ளதாக வவுனியாவில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேசமயம், வவுனியா குட்செட் வீதிச் சந்தியில் ரயர்கள் எரிக்கப்பட்ட சமயம் அவ்வீதியில் நின்ற இருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர் சம்பவஇடத்திற்கு விரைந்து நிலைமையை அவதானித்த பின்னர் வவுனியா பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு பேசியதை அடுத்து உடனடியாக அவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை, ஓமந்தைச் சோதனைச் சாவடியும் மன்னார் உயிலங்குளம் சோதனைச் சாவடியும் மூடப்பட்டிருந்தமையால் கொழும்பிலிருந்து ஏ ஒன்பது நெடுஞ்சாலையூடாக வடபகுதிக்குச் செல்ல வந்தவர்களும், மன்னார் உயிலங்குளம் சோதனைச்சாவடி ஊடாக பயணம் செய்ய வேண்டிய பயணிகளும் வவுனியா நகரில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. (10,மி)

## திருமாவளவன்...

ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை தளபதி கேணல் தீபன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஈகச்சுடரினை வைத்தியகலாநிதி யூ.டி.ரமேஸ்குமார், கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன், வணிக ஒன்றியத்தலைவர் ஜெயராஜ் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து தலைமையுரையைத் தொடர்ந்து நான்கு நூல்களுக்குமான வெளியீட்டுரையினை வெளிச்சம் சஞ்சிகையின் ஆசிரியர் கருணாகரன் நிகழ்த்தினார்.

இதனையடுத்து நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. கப்டன் மலரவன் எழுதிய "போர் உலா" என்ற நூலினை போராளி தமிழக்கவி அவர்கள் வெளியிட்டு வைக்க தளபதி கேணல் தீபன் பெற்றுக்கொண்டார்.

அடுத்து பரீஸ்பொலெவோயின் "உண்மை மனிதன்" என்ற நூலினை ஊடக ஒருங்கிணைப்புப் பிரிவுப்பொறுப்பாளர் நரேஷ்மாஸ்ரர் வெளியிட்டுவைக்க தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் பெற்றுக்கொண்டார்.

அடுத்து முனைவர் கோவூரின் "மனக்கோலம்" என்ற நூலினை நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன் வெளியிட்டு வைக்க தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா.அவர்கள் பெற்றுக்கொண்டார்.

அடுத்து "பண்டிதரின் நினைவுநாட்குறிப்பேட்டினை" அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் வெளியிட்டு வைக்க தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து நூல்களுக்குரிய மதிப்பிட்டுரைகள் இடம்பெற்றது. இதில் "போர் உலா" என்ற நூலிற்கு போராளி மலைமகள் அவர்களும், "உண்மை மனிதன்" என்ற நூலிற்கு போராளி கலைக்கோன் அவர்களும், "மனக்கோலம்" என்ற நூலிற்கு புதுவை அன்பன் அவர்களும், "பண்டிதர் நாட்குறிப்பேடு" என்ற நூலிற்கு தமிழ்ச்சங்கச் செயலாளர் பரமநாதபிள்ளை அவர்களும் மதிப்பீட்டுரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து இவ் அறிமுக விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்த தமிழ்நாடு விடுதலைச்சிறுத்தைகள் இயக்க தலைவர் தொல்.திருமாவளவன் அவர்கள் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து விடுதலை முரசு கலைஞர்களின் இன்னிசை கானம் நடைபெற்று நிகழ்வு நிறைவடைந்தது.

இவ் அறிமுக விழாவில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், எழுத்தாளர்கள, கலைஞர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (கு,ச)

## தமிழ்ச்செல்வன்...

கலந்துகொண்டனர். நோர்வேக் குழுவினர் சார்பாக இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கான்ஸ்பிறஸ்கர் உள்ளடங்கிய குழுவினர் பங்குகொண்டனர்.

திருகோணமலை, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாகவும், குறிப்பாக திருகோணமலையில் இடம்பெற்ற வன்முறைகளில் ஆளும்கட்சியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி செயற்பட்டமை பற்றியும் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழதேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள மாவீரர் தினத்தன்று ஆற்றிய உரையின் உள்ளடக்கத்தை நோர்வே தூது வருக்கு விரிவாக விளக்கிக்கூறிய தமிழ்ச்செல்வன் தலைவர் வலி யுறுத்திக்கூறியுள்ள அரசியல் சூனியநிலை தொடர்பான கருத்தை வலியுறுத்தி அந்தநிலைகளை யப்படவேண்டும் என்று கூறினார். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைத் தாம் உறுதியாகக் கடைப்பிடித்து வருவதாக உறுதியளித்த தமிழ்ச் செல்வன் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு சிறிலங்கா அரசின் பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும் கூறினார்.

கடந்த வாரம் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையும் சுட்டிக்காட்டி அவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் அமைதி முயற்சிகளையும் ஆபத்தில் தள்ளக்கூடியவை என்று சந்திப்பில் நோர்வே தூதுவர் கூறியமைக்கு தமிழ்ச்செல்வன் பதிலளிக்கையில் - அமைதி முயற்சிகளைக் குழப்ப முயலும் சக்திகளே திருகோணமலையிலும் இதர தமிழ்ப் பிரதேசங்களிலும் தமிழ் மக்களைக் கோபமூட்டும் வன்முறைச் சம்பவங்களை மேற்கொண்டு வருகின்றன. இவற்றை சிறிலங்கா அரசு கட்டுப்படுத்த வேண்டும். இந்தச் சம்பவங்களே மக்கள் கலவரங்களைத் தூண்ட வல்ல பதற்றத்தைத் தோற்றுவிக்கின்றன என்றார்.

மேலும், நோர்வேயின் விசேட சமாதானத் தூதர் எரிக்சொல்ஹெய்ம் எதிர்வரும் வாரம் இலங்கை வந்தபின் அவருடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்பே ஊடகங்களுக்குத் தமது நிலைப்பாடு வெளியிடப்படும் எனத் தெரிவித்துள்ளார். இந்த வகையில் எதிர்வரும் 6ஆம் திகதி அல்லது 8ஆம் திகதி இந்த சந்திப்பு இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, கொழும்பிலிருந்து தான் விசேட செய்தி எதனையும் எடுத்துவரவில்லை எனவும் நோர்வேயின் இலங்கைக்கான தூதர் கான்ஸ்பிறஸ்கர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த இவர்கள் தரைவழிப்பாதையூடாக கிளிநொச்சியை வந்தடைந்தனர். சந்திப்பு நிறைவடைந்ததும் தரைவழிப்பாதையூடாகக் கொழும்பைச் சென்றடைந்தனர். (லோ)

## பிரபாகரன்...

தாயகமாக பார்மாவைத் தாங்கள் இழந்ததை எப்போதுமே நினைவுபடுத்திக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

எனது மூதாதையர் பல ஆண்டுகளிற்கு முன்பே பார்மாவிற்கு புலம்பெயர்ந்துவிட்டனர். நான் பார்மாவில் தான் பிறந்தேன். ஆனால் நாங்கள் அங்கிருந்து தூக்கியெறியப்பட்டோம் எனத் தெரிவித்துள்ளதோடு, எனது தந்தையார் தமிழ்நாட்டிற்குத் திரும்பிப் போவதை விரும்பவில்லை. பர்மாவிற்கு அருகில் நாங்கள் இருப்பது எங்களிற்கு எப்போதும் பர்மாவை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் என்று தெரிவித்தார். இக்கிராமத்திலுள்ள தமிழர்கள் தங்களின் அடையாளத்தை உயிரோட்டமாகப் பாதுகாப்பதற்கு, பிரபாகரன் மீதான பற்றையே ஆதாரமாக, மையப் பொருளாகக் கொண்டுள்ளார்கள் எனத் தெரிவித்துள்ள மேற்படி நிருபர், பிரபாகரன் வீரத்தின் ஒட்டு மொத்த வடிவம் என்றும் நாங்கள் தமிழர்கள் என்ற அடையாளத்தைப் பேணுவதற்கான ஊக்கத்தை, ஆத்மபலத்தை அப்பெயரே தந்து நிற்பதாகவும் துளசிராஜ் என்ற தமிழர் தெரிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளதோடு, பர்மாவிற்கு (மியன்மார்) அருகில் தொடர்ந்தும் இருப்பதற்கும், பர்மாவிற்கு ஒருநாள் திரும்புவதற்குமான நம்பிக்கையை பிரபாகரனே தந்து நிற்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.


கிளி / இந்துக் கல்லூரி

பழைய மாணவர் சங்கக் கூட்டம்

02-12-2004ஆம் திகதியில் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட மேற்படி கூட்டம் பாடசாலை அதிபர், பழைய மாணவர் சங்க அனுமதியின்றிப் போடப்பட்ட காரணத்தினால் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

திருமதி. தே. புவனேஸ்வரன்
அதிபர்,
பழைய மாணவர் சங்கத் தலைவர்.

(சி-10842)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.